**சிரம வாசனா நிதியம் - 2018**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சிரம வாசனா நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

-----------------------------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி

அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாகபோதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது

கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | குறித்த நியமங்களுடன் தொடர்புடனான இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் 02** | | |
| i | மீளாயவ்ாண்டின் மிகை ரூபா 19,238,084 ஆக இருந்த போதும் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது முன்னைய ஆண்டின் சீராக்கங்கள் ஆண்டின் மிகையுடன் சீராக்கி மிகை ரூபா 17,576,743 என பதிவுசெய்யப்பட்டிருந்தது. | காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது முன்னைய ஆண்டின் இலாபத்திலிருந்து மேற்கொண்ட சீராக்கமான ரூபா 1,661,340 தொகை 13 ஆம் இலக்க குறிப்பின் மூலம் சுட்டிக்காட்டி ஆண்டின் மிகை மறை முகமாக இ.பொ.க.நி. இலக்கம் 02 இன் 27 (ஆ) இன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. | காசுப் பாய்ச்சல் கூற்று தயாரித்தல் தொடர்பாக நியமத்தில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| ii. | மீளாய்வாண்டில் பணமாக கிடைத்த நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 14,704,198 ஆக இருந்த போதும் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் நிலையான வைப்பு வட்டியாக ரூபா 11,104,892 மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது. | நிலையான வைப்புக்களிலிருந்து கிடைக்கம் வட்டி பதிவு செய்தல் நிதியத்தின் மூலம் கட்டுப்பாட்டுக் கணக்கினூடாக மேற்கொள்ளல் இதற்கு காரணமாக உள்ளது. எதிர்காலத்தில் சரி | முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் கிடைத்த காசுப் பாய்ச்சலாக பணமாக வைக்கப்பட்டிருந்த வைப்பு வட்டி வருமானம் இனங்காணப்பட்டு உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| iii. | முதலீட்டு செயற்பாட்டிற்காக காசு உட்பாய்ச்சலில் நிதியத்தின் இணையத்தள அபிவிருத்திக்காக பணமாக செலவிடப்படாத ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடான ரூபா 390,000 உம் உள்ளடக்கப்பட்டிருந்தது. | இ.பொ.க.நி. இலக்கம் 02 இன் 27 (ஆ) இன் பிரகாரம் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசல்லாத தன்மையான கொடுக்கல் வாங்கல் களுக்காக கடந்த கால அல்லது எதிர்கால தொழிற்பாட்டு பெறுவனவுகளில் அல்லது கொடுப்பனவுகளில் உள்ள ஏதேனும் பிற்போடப்பட்ட அட்டுறு தொகை கூற்றில் கிடைத்த முதலீட்டு நிதி ஏற்பாடாக உள்ளடக்கப்பட்டுள்ளது | கணக்காய்வுப் பந்தி முதலீட்டு செயற்பாடுகளுக்காக காசுப் வெளிப் பாய்ச்சல் பொருந்தும். காசுப் பாய்ச்சல் கூற்று தெளிவாக செலவினம் இனங்காணப்பட்டு தயாரிக்கப்பட வேண்டும். |
| iv | முன்னைய ஆண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடாக இனங்காணப்பட்டிருந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மென்பொருள் அபிவிருத்தி மற்றம் பதவியணியனர் பயிற்சிக்கான செலவினம் ரூபா 1,069,665 மீளாய்வாண்டின் போது முதலீட்டு செயற்பபாடுகளின் கீழ் பண உட்பாய்ச்சலாக மீண்டும் இனங் காணப்பட்டிருந்தது. இதில் ரூபா 549,000 தொகையான | இ.பொ.க.நி. இலக்கம் 02 இன் 27 (ஆ) இன் பிரகாரம் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசல்லாத தன்மையான கொடுக்கல் வாங்கல்களுக்காக கடந்த கால அல்லது எதிர்கால தொழிற்பாட்டு பெறுவனவுகளில் அல்லது | காசுப்பாய்ச்சல் கூற்று மீளாய்வாண்டிற்குரிய காசு வெளிப் பாய்ச்சலாக மாத்திரம் உள்ளடக்கப்பட்டு காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | மென்பொருள் அபிவிருத்திச் செலவினம் மென்பொருள் கொள்வனவாக மீண்டும் நிலையான சொத்துக்கள் கொள்வனவாக காசு வெளிப் பாய்ச்சலாக இனங்காணப்பட்டிருந்ததுடன் ரூபா 520,665 ஆண்டின் செயற்பாட்டு இலாபத்தில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. இதனால் காசுப்பாய்ச்சல் முன்வைப்பு சரியானதல்ல. | கொடுப்பனவுகளில் உள்ள ஏதேனும் பிற் போடப்பட்ட அட்டுறு தொகை கூற்றில் கிடைத்த முதலீட்டு நிதிஏற்பாடாக காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது | |
| **(ஆ)** | **இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03** | | |
| | முன்னைய ஆண்டுகளுக்குரிய நடப்பாண்டில் செய்யப்பட்டரூபா 1,661,340 ஆன சீராக்கத்தில் கொடுக்கல் வாங்கல் மற்றும் சம்பவங்களுக்குரிய நியமத்தின் 47, 50 54 (அ) (ஆ) (இ) பிரிவுகளல் குறிப்பிடப்ட்டுள்ள வழிகாட்டல்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2017 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது 2018 ஆம் ஆண்டின் திரட்டிய நிதிக்கு சீராக்கம் செய்த ரூபா 1,661,340 தொகை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் பின்னோக்கி ஒப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன .எதிர்காலத்தில் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சமர்ப்பித்தலை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | நியமங்களில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்குரிய நோக்கங்களுக்கு இணங்க நிதியத்தினால் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும் |

**(இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

| | | | |
|---|---|---|---|
| i. | நியமத்தின் 49 ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் தனித்தனியாக உரித்தாகும் சொத்து வகைக்கு மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக நிதியத்தினால் 2018 ஆம் ஆண்டில் 3 சொத்து வகைக்குரிய 14 சொத்து உருப்படிகள் மாத்திரம் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 தொடர்பாக ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் தனித்தனியாக உரித்தாகும் சொத்து வகைக்குரியதாக மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும் | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்குரிய முரணற்ற வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும் |
| ii | நியமத்தின் 52 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்துக்கள் மீள்மதிப்பீட்டிலருந்து கிடைத்த இலாபம் மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 211,700 ஆன மீள்மதிப்பீட்டு இலாபம் இலாபநட்டக் கணக்கில் ஏனைய வருமானத்தின் கீழ் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிதியத்தினால் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட இலாபம் வருமானக் கூற்றில் வருமானத்துடன் கூட்டிக் காண்பிக்கப் பட்டிருந்தது. எதிர்காலத்தில் இ.பொ.க.நி இலக்கம் 07 இன் நியமத்தின் 55 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்துக்கள் மீள் மதிப்பீட்டிலிருந்து கிடைக்கும் இலாபம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். | - மேற்படி - |
| **(ஈ)** | **இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 08** | | நியமத்திற்கு இணங்க நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்களுடன் தயாரிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| நியமத்தின் 100 ஆம் பிரிவின் பிரகாரம் வெளிப்படுத்த வேண்டிய் 2016 ஆம் ஆண்டில் சேவையிலிருந்து விலகிய இரண்டு உத்தியோகத்தரால் நிதியத்திற்கு எதிராக தொழில் நீதி மன்றத்திற்கு செய்யப்பட்ட முறைப்பாடொன்று மீளாய்வாண்டு வரைவிசாரிக்கப்பட்டு வந்த போதும் நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் நிதிக்கூற்றுகளில் நிதியத்திற்கு எதிராக தொடரப்பட்டிருந்த வழக்கு தொடர்பாக வெளிப்படுத்தலொன்று மேற்கொள்ளுமாறு குறித்த உத்தியோகத் தர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |

## 1.5.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

-------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| சிரம வாசனா நிதியத்தின் மூலம் பாடசாலை மாணவர்களுக்கு புலமைப் பிரிசில் வழங்கல் | 1,691,750 | தொழில் மரணம் காரணமாக பெற்றோரை இழந்த 50 மாணவர்களுக்கு ரூபா1,691,750 ஆன புலமைப்பரிசில் வழங்கப்பட்ட மாணவர்களின் தகவல்கள் உறுதிப்படுத்து வதற்குரிய விபரங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | விபத்து தொடர்பாக சட்டரீதியான செயற்பாடுகள் காணப்படும் போது இறந்த அல்லது வலது குறைந்த ஊழியரின் சேவை நிலையங்களிலிருந்து ஊழயிர் தொடர்பாக தகவல்களைப் பெற்றக்கொள்ளவதற்கு தாமதமாக இருந்தது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் பணிப்பாளர் சபையினால் | நலன்களை வழங்குவதற்கு முன்னர் உரிய நலனாலிகளின் தகைமை நியதிகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா என கருத்திற் கொள்ளப்பட வேண்டும். |

அங்கீகரிக்கப்பட்ட நியதிகள் அடிப்படையில் நலனாலிகள் குழுவினால் அனுமதித்தல் இடம்பெறும்.

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்தின் 20 ஆம் பிரிவு | நிதியத்தினால் 2018 ஆம் ஆண்டிற்காக 04 ஊழியர்களுக்காக பணிக்கொடை கணக்கிடும் போது ஆரம்ப சம்பளம் மாத்திரம் கருத்திற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக பணிக்கொடைக்காக ஒதுக்கீடு ரூபா 140,400 குறைத்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 2018 ஆம் பணிக்கொடை கணக்கிடும் போது ஆரம்ப சம்பளம் மாத்திரம் கருத்திற் கொள்ளப்பட்டிருந்த போதும் பணிக்கொடை கொடுப்பனவின் போது கருத்திற்கொள்ள வேண்டிய படிகளான வாழ்க்கை செலவினக் கொடுப்பனவும் சேர்க்கப்பட்டு 2018 ஆம் பணிக்கொடை கணக்கிடப்பட்ட ஒதுக்கீடும் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | பணிக்கொடைச் சட்டம் மற்றும் சுற்றிக்கையின் பிரகாரம் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 1.7 நிதிய முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 58,900,000 ஆக இருந்ததுடன் இச்செலவினத்திற்காக திறைசேரியிடமிருந்து ரூபா 30 மில்லின் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் அவ்வாறு பெற்றுக்கொண்ட பணத்தை ஊழியர்களினதும் அவர்களின் நலன்களை மேம்படுத்துவுதற்காக பாதீடு செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் பயன்படுத்தாமல் ரூபா 20 மில்லியனை மக்கள் வங்கியில் 11 சதவீதம் மற்றும் 10.5 வீதமான வட்டி வீதத்தில் நிலையான வைப்புக்களின் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | தேசிய சம்பத லொத்தரிலிருந்து கிடைக்கும் வருமானம் லொத்தர் சபையினால் சிரம வாசனா பெயரிலான திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகின்றது. அந்நிதியம் சிரம வாசனா நிதியத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு நிதியம் செயற்படுத்துகின்ற நிகழ்ச்சிகளின் அளவு அல்லது அற்காக செலவிடப்படும் பணத்தொகை உரித்தாகாததாகவும் திறைசேரியால் நிதியத்தின் பணத்தை ஒரே தடவையில் வழங்குவதற்கு முடியாமையால் அவ்வப்போது வழங்குகின்றது. நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டு முதிர்ச்சியடைந்தவுடன வட்டி மற்றும் வைப்புபணம் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றது. | ஊழியர்களினதும் அவர்களின் தங்கியிருப்போரினதும் நலன்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களில் நிதியத்தின் பணம் செயற்திறனாகவும் ஆக்க பூர்வமாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்த வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

---------------------

### 2.1 நிதி விளைவுகள்

-----------------------------

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 19,238,084 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 13,155,579 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 6,082,504 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இவ அதிகரிப்பிற்கு லொத்தர் வருமானம் ரூபா 5,728,181 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு முகாமைத்துவம்

----------------------------------------------------

### 3.1 மனித வள முகாமைத்துவம்

---------------------------------------

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்தினால் மனிதவள முகாமைத்துவ திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும் அது 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்படா திருந்ததுடன் அச்சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் பதவியணியினர் நிபுணத்துவ தேவைப்பாடொன்று இனங் காணப்படவில்லை. | நிறுவகத்தினால் சகல ஊழியர்கள் ஓராண்டிற்கு ஒருமுறை மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு அவர்களின் பயிற்சி தேவைப்பாடு இனங்காணப்பட்டு மனித வளத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் பொ.நி.சுற்றறிக்கை 02/2018 இன் பிரகாரம் எதிர்காலத்தில் மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியத்தின் பதவியணியினர் நிபுணத்துவ தேவைப்பாடு இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மனிதவளத் திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |